# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,986—1962 මාර්තු 16 වැනි සිකුරාදා—1962.3.16**

12,986 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு மாச்சு மாதம் 16 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 143 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாநுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | — | " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### மருதமுனை (கரைவலை) மீன்பிடிப்பிரமாணங்கள்

**உத்தரவாணைக்கான விண்ணப்பங்கள், 1962**

1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ம் திகதியின் 12,553 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரமான பிரமாணங்களுக்கு தங்கள் கவனத்தை செலுத்துமாறு வேண்டப்படுகின்றது.

கூறப்பட்ட பிரமாணங்களின் கீழ் தகமை யடையும் யாவரும், 1962 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 10 ம் திகதிக்குப் பிந்தாமல் கடற்றொழில் அதிபருக்கு கிடைக்கக்கூடியதாக, தங்கள் விண்ணப்பங்களை, கல்முனை கடற்றொழில் உபபரிசோதகர் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள், கல்முனை கடற்றொழில் உபபரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் வேண்டிய விபரங்களை, கல்முனை கடற்றொழில் உபபரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளவும்.

டீ. சீ. ஈ. ஏ. டி. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந் உ.

3—448.

---

### பிரகடனம்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள கரைச்சி துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள பரந்தன் கிளிநொச்சி கிராமத் தலைமைக்காரர் பகுதி, பரந்தன் கிராமத்திலுள்ள கால்நடைகளிடையே அடைப்பான் நோய் ஆரம்பித்திருப்பது காரணமாக, 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க " தொற்றுநோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச் சட்டத்தின் " கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினாலும் குறித்த பிரமாணத்தின் (அத்தியாயம் 327) உட்பிரிவு 4, உப உட்பிரிவு (1) ன் விதிகளுக்கு அமையவும், அரசாங்க பிரதம மிருகவைத்தியரான ஆரியதாச அமரசிங்க ஆகிய யான், கீழ்க்குறித்த எல்லைகளுக்குள் அடங்கிய பிராந்தியத்தை ஒரு " தொற்று நோய் பிரதேசம் " என்று பிரகடனப்படுத்துகின்றேன்.

வடக்கு : ஆனையிறவு கிராமத் தலைமைக்காரர் பிரிவு ;

தெற்கு : துணுக்காய், உயிலங்குளம் கிராமத் தலைமைக்காரர் பிரிவு ;

கிழக்கு : கண்டாவளை, முரசுமோட்டை கிராமத் தலைவர்களின் பிரிவு ;

மேற்கு : பூநகரி காரியாதிகாரியின் பிரிவு.

இப்பிரகடனம் மறு அறிவித்தலால் நீக்கப்படும்வரை இப்பகுதியிலிருந்தும் இப்பகுதிக்கும் கால்நடைகள் அல்லது மாட்டுவண்டிகள் நடமாட்டத்தை நடத்துதல் ஆகாதென்று இதே பிரமாணத்தின் 7 வது உட்பிரிவின்கீழ் பிரகடனஞ் செய்கின்றேன்.

" தொற்றுநோய் " பிராந்தியத்திலுள்ளவர்கள் சட்டப்பிரகாரம் கையாளவேண்டிய செயற்பாடுகளை எடுத்துரைக்கும் 1937 ம் ஆண்டின் தொற்றுநோய் (விலங்குகள்) பிரமாணங்களை, கால்நடை உரிமையாளரும் மாட்டுவண்டிகள் உரிமையாளரும் தம் அவதானத்துக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இப்பிரமாணங்களின் விரிவான தகவல்களை கிளிநொச்சி பகுதியில் உள்ள மிருகவைத்தியரிடமிருந்தும் கரைச்சி, துணுக்காய் பகுதி காரியாதிகாரியின் களரியில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

ஈண்டுப் பொறிக்கப்பட்ட தேதிமுதல் இப்பிரகடனம் செயல்முறைக்கு வந்துள்ளது.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருகவைத்தியர்.

கமத்தொழில் துணையதிபர் களரி,
(விலங்குற்பத்தி-சௌக்கியம்),
கமத்தொழிற்றுறை, பேராதனை,
1962 ம் ஆண்டு மார்ச் மீ 2 ந் உ.

3-522.

---

**வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

**வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

## அறிவித்தல்

7.7.61 ன் 12,508 இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபடி 1957 ம் ஆண்டின் 33 ம் இலக்க தொற்று நோய்கள் (விலங்குகள்) பிரமாணத் திருத்தச்சட்டத்தின் உட்பிரிவு 4, உபபிரிவு 1 (அத்தியாயம் 327) ன் விதிகளுக்கமைய "தொற்றுநோய்ப்பிரதேசம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில், வடமாகாணம் யாழ் மாவட்டத்தில் கரைச்சி–துணுக்காய் காரியாதிகாரியின் பிரிவைச் சேர்ந்த கிளிநொச்சி கிராம விதானையின் பிரிவு, "அடைப்பான்" நோயிலிருந்து விடுபட்டுள்ளதால் இப்பகுதி "தொற்றுநோய்ப் பிரதேசமல்ல" என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இப்பிரகடனம் ஈண்டுப் பொறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து செயல்முறைக்கு வந்துள்ளது.

ஆரியதாச அமரசிங்க,
அரச பிரதம மிருகவைத்தியர்.

அரச பிரதம மிருகவைத்தியர் கஎரி,
பேராதனை,
1962 ம் ஆண்டு மார்ச் மீ 2 ந் உ.

3–521

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்,
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது